## 55

# “தராசில் நிறுக்கப்பட்டது”

## (18:3-17, 22-24)

*பாபிலோனின் அரசனாக, இருந்த பெல்ஷாத்சார், என்பவன் தனது பிரபுக்களில் ஆயிரம் பேருக்கு ஒரு விருந்து கொடுத்தான்.[1] விருந்தின் உச்சக் கட்டத்தின்போது அரசன், எருசலேம் தேவாலயத்தில் இருந்து எடுத்துக்கொண்டு வரப்பட்ட பொன் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டுவரும்படி கட்டளை இட்டான். பரிசுத்தமான பாத்திரங்களில் மதுமானத்தை ஊற்றி அந்த விருந்தினர்கள் அருந்தியவேளையில், ஏளனமான சிரிப்புகள் அந்த விருந்து மண்டபத்தில் எதிரொலித்திருக்க வேண்டும், மற்றும் அவர்கள், எபிரெயர்களின் தேவனைக்[2] கேலி செய்திருப்பார்கள். இருப்பினும், உருவமற்ற ஒரு கையுறுப்பானது தோன்றி, “மெனே,[3] மெனே, தெக்கேல்,[4] உப்பார்சின்”[5] (தானியேல் 5:25) என்று சுவற்றில் எழுதிய வேளையில், அந்த சிரிப்பு யாவும் நிச்சயமாகவே உலர்ந்து போயிருக்கும்.*

*இவ்வார்த்தைகளுக்கு மூன்று அர்த்தங்கள் இருந்தன என்று அரசனுக்குச் சொல்லப்பட்டது: (1) அவனது அரசாட்சியைத் தேவன் எண்ணிக் கணக்கிட்டிருந்தார், அது ஒரு முடிவுக்கு வந்திருந்தது (வசனம் 26); (2) “அவன் தராசில் நிறுக்கப்பட்டு, ... குறையக் காணப்பட்டான்” (வசனம் 27; KJV); மற்றும் (3) அவனது இராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியர் மற்றும் பெர்சியர் ஆகியோரின் கைகளில் ஒப்புவிக்கப்படும் (வசனம் 28). “அன்று இராத்திரியிலே கல்தேயரின் இராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான்” (வசனம் 30). தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டபடி, பாபிலோன் நகரம் மேதிய-பெர்சியரின் கைகளுக்குள் விழுந்தது (வசனம் 31).*

*வெளிப்படுத்தின விசேஷத்தில் “மகாபாபிலோன்” என்று அழைக்கப்படும் ரோமாபுரி நகரம், பழங்கால பாபிலோனுக்குப் புதிய ஏற்பாட்டின் மாற்றுப்பிரதியாக உள்ளது.[6] ரோமாபுரியின் “சுவரில் எழுதப்பட்ட கையெழுத்து” வெளிப்படுத்தின விசேஷம் 18ல் காணப்படுகிறது. தானியேல் ரஸ்ஸல் என்பவர், “இது புரிந்துகொள்வதற்கு மிகச் சுலபமான அதிகாரங்களில் ஒன்றாக உள்ளது”[7] என்று கூறினார். ஒரே செய்தியானது திரும்பத் திரும்ப கூறப்படுகிறது: “பாபிலோன் (அதாவது ரோமாபுரி) பாழாயிற்று.” நாம் இந்த அதிகாரத்தைப் பிற்பாடு முழுமையாக ஆய்வு செய்வோம், ஆனால் இவ்வேளையில் நான், ரோமாபுரியைப் பற்றி வசனப்பகுதி வெளிப்படுத்துபவற்றைத் தரவழைப்பேன்.[8] அந்த மகாநகரம், தேவனுடைய நீதியின் தராசில் நிறுக்கப்பட்டபோது, அது குறைவாக*

*காணப்பட்டது ஏன்? அதிகாரம் 18ல், ஒவ்வொரு நகரத்திற்கும் - மற்றும் ஒவ்வொரு குடிமகனுக்கும்/குடிமகளுக்கும் - பாடங்கள் அடங்கியுள்ளன.*

## கண்கவரும் தன்மை, ஆனால் அழிந்துபோகுதல் (18:5, 7, 14, 16, 22, 23)

*நமது வசனப்பகுதியில், ரோமாபுரியானது, "இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த"[9] (வசனம் 16) "ராஜஸ்திரீக்கு" (வசனம் 7) ஒப்பிடப்பட்டுள்ளது. "கொழுமையானவைகளும் சம்பிரம மானவைகளும்" அதனிடத்தில் இருந்ததாக 14ம் வசனம் குறிப்பிடுகிறது* (NEB). *அமெரிக்கக் கவிஞரான எட்கர் ஆலன் போ என்பவர் "கெம்பீர மாயிருந்த ரோமாபுரி" யைப் பற்றி எழுதியிருந்தார்.*[10]

> *புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் ரோமாபுரியானது தனது வளர்ச்சியின் முழுமையான வீச்சில் இருந்தது. ... உயர்குடி வர்க்கத்தினரின் ஆட்சியானது ... மூன்று கண்டங்களின் ஆதாயங்களைக் கொண்டு புறநகர்ப்பகுதிப் பெருவீடுகள் மற்றும் கிராமப்புற நிலங்கள் ஆகியவற்றைச் செழிப்பாக்கியிருந்தது. ராயர்கள் ... ஒருவேளை, எந்த ஒரு தலைநகரத்திலும் இணையாகக் காணப்பட இயலாத பொதுக்கட்டிடங்களின் வரிசையொன்றை நகரத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியில் கட்டியெழுப்பியிருந்தனர்.*[11]

*ரோமாபுரியானது, உலகம் முழுவதிலும் இருந்த கலைகள், கவர்ந்திழுக்கும் இலக்கிய மற்றும் கைவினைத் திறமைகளின் மையமாக இருந்தது. "சுரமண்டலக்காரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம்" (வசனம் 22) நகரம் முழுவதிலும் கேட்கப்பட முடிந்தது. திறமையான கைவினைக்காரர்களின் படைப்புகள் (வசனம் 22) கண்ணுக்கு விருந்தளித்து உணர்வுகளைத் தூண்டிவிட்டன. ரோமாபுரியானது விளக்குகளால் ஜொலித்தது, செயல் முனைப்பினால் பொங்கியது மற்றும் சந்தோஷச் சிரிப்பினால் நிறைந்திருந்தது (வசனங்கள் 22, 23). பார்வையாளர்களுக்கு, அந்த நகரத்தின் ஒவ்வொரு மூலையிலும் புதிய பிரமிப்பு இருந்தது.*

*துரதிர்ஷ்டவசமாக, ரோமாபுரி அழகாயிருந்தது மாத்திரமின்றி; அது மோசமானதாகவும் இருந்தது. அதன் பாவங்கள் "வானபரியந்தம்[12] எட்டினது* [piled up[13]]*" என்று 5ம் வசனம் கூறுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு, மனிதர்கள் பரலோகத்தை எட்டுவதற்கு ஒரு கோபுரம் கட்ட முயற்சித்திருந்தனர் (ஆதியாகமம் 11). பாபேலின் குடிகள், செங்கற்களைக் கொண்டு சாதிக்க இயலாததை, மகாபாபிலோன் குடிகள் பாவத்தைக் கொண்டு சாதித்திருந்தனர்.*

*பவுல், ரோமாபுரியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதியபோது, அவரது நாட்களில் இருந்த சமுதாயத்தின் - ரோமாபுரியின் வழிநடத்துதலை*

*ஏறக்குறையப் பின்பற்றியிருந்த சமுதாயத்தின் - பாவம் நிறைந்த தன்மையைப் பற்றிப் பின்வருமாறு ஏவுதல் பெற்ற விவரிப்பு ஒன்றைக் கொடுத்தார்:*

> *இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப் படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.*
>
> *இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களை சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.*
>
> *தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள் (ரோமர் 1:24-32).*

*தாமஸ் ஃபுல்லர் என்பவர், "பாவத்தில் விழுபவன் மனிதன், அதுபற்றி வருந்துகின்றவன் புனிதன், ஆனால் அதைக்குறித்து மேன்மை பாராட்டுபவன் பிசாசு" என்று கூறினார்.[14] ரோமாபுரியானது பாவம் செய்திருந்தது மட்டுமின்றி, தனது பாவத்தைக் குறித்து இறுமாப்பாகவும் இருந்தது. வெளிப்படுத்தின விசேஷம் 17முதல் 19வரையுள்ள அதிகாரங்கள், சீரழிவுத்தன்மை மற்றும் ஆணவச்செருக்கு என்பவற்றின் பண்பைப் பற்றிய விரிவான சித்தரிப்பை வரைகின்றன, ஆனால் வில்லியம் பார்க்ளே என்பவர்,*

*''ரோமர்கள் தங்களுக்குத்தாங்களே வரைந்திருந்த சித்திரங்கள் சிலவற்றுடன் ஒப்பிடும்போது; ரோமாபுரியைப் பற்றிய பவுலின் சித்தரிப்பானது, உண்மையில் குறைவுபடுவதாக இருக்கிறது'' என்று கூறினார்.*[15]

*சாலொமோன், ''நீதி ஜனத்தை உயர்த்தும், பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி'' என்று கூறினார் (நீதிமொழிகள் 14:34). ரோமாபுரியானது, தனது ''பெருமையான கிரீடம், வாடிப்போகும் புஷ்பமாக''வும் (ஏசாயா 28:1;* KJV*) இருந்தது என்றும், "அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்" (நீதிமொழிகள் 22:8;* NIV*) என்றும் அறிந்துகொள்ளும். ஞானியின் வார்த்தையைத் தழுவுவதென்றால், "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படு கிறவர்களே புகழப்படுவார்கள்" (நீதிமொழிகள் 31:30ஐக் காணவும்).*

## வல்லமை நிறைந்தது, ஆனால் நிலை திரிந்தது *(18:3, 9, 11-17, 23)*

*ரோமாபுரிக்கிருந்த தொலைதூரம் சென்றடையும் செல்வாக்கு, 17, 18, 19 ஆகிய அதிகாரங்களில் தெளிவாகிறது: அது பூமியில் இருந்த மக்களினங்களின்மீது ஆளுகை செலுத்தியது (17:1, 15); அது, அதிகாரப் பதவி கொண்டிருந்தவர்கள், அது இல்லாதவர்கள் ஆகியோர்மீது ஆணையிட்டு அதிகாரம் செலுத்தியது (17:18). ரோமாபுரியின் அவையில் ஏற்படுத்தப்பட்ட முடிவுகள், பேரரசின் ஒவ்வொரு மூலையிலும் செயல்விளைவை ஏற்படுத்தின. உலகவர்த்தகத்தின்மீதும் ரோமாபுரி நகரம் மேலாதிக்கம் செலுத்திற்று (18:11-17). "ரோமாபுரியின் துறைமுகமாயிருந்த ஆஸ்டியாவில், வர்த்தகர்களுக்கான நிறுவனங்கள் அமையப்பெற்றிருந்த, தூண்களினால் தாங்கப்பட்ட சதுர மண்டபம் ஒன்றிருந்தது, ... அங்கே அவர்கள் தங்கள் அலுவலங்களைக் கொண்டிருந்தனர், இது பேரரசின் அதிகாரத்தினுடைய மிகப்பெரிதான மையங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும்."*[16]

*ரோமாபுரியானது நன்மைக்கு என்ன ஒரு அதிகாரமாய் இருந்திருக்கலாம்! இருப்பினும் அது, நாடுகளை மேலே உயர்த்துவதற்குப் பதிலாக, அவற்றைக் கீழே இழுத்துத் தள்ளிற்று. தூதன், "அவர்களுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் இராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள்" என்று கூறினார் (18:3அ). மீண்டுமாக 9ம் வசனமானது, பூமியின் இராஜாக்கள் ''அவளுடனே வேசித்தனஞ் செய்தது'' குறித்துப் பேசுகிறது. ஆங்கில வேதாகமத்தில் இவ்விடத்தில்* ''immorality'' *என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "வேசித்தனம்" என்று நேரடி அர்த்தப்படுகிறது* [*தமிழில் இது ''வேசித்தனம்'' என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது*]. *இது உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய வேசித்தனத்தை உள்ளடக்குகிறது, விசேஷமாக இது, பேரரச வணக்கத்துடன் தொடர்புடையதாக உள்ளது, ரோமாபுரி, தனது வேசித்தனத்தினால் முழு உலகத்தையும் சீரழித்திருந்தது*

*(19:2ஐக் காணவும்).*

*ரோமாபுரி, தனது ''சூனியத்தால்'' எல்லா மக்களினங்களையும் மோசம்போக்கிற்று என்று 23ம் வசனம் கூறுகிறது. "சூனியம்" என்பது, கள்ளத்தீர்க்கதரிசியால்[17] பயன்படுத்தப்பட்டவற்றைப் போன்ற போலிஅற்புதங்களைக் குறிக்க முடியும், இருப்பினும் இது, அந்த நகரம், பூமியின் குடிகளின்மீது "உச்சரித்த உச்சாடனத்தை"க் குறிக்கிறது: அது, ''பாதுகாப்பு பற்றிய தவறான ஒரு உணர்வைக்கொண்டு எல்லா மக்களினங்களையும் சூனியத்திற்குள்ளாக்கி இருந்தது."[18] அது "செல்வம் மற்றும் ஆடம்பரம் ஆகியவற்றில் இறுதியான பாதுகாப்பைக் கண்டறிய முடியும், ... எனவே தேவனை விலக்கி வைக்க [முடிய]லாம் என்று நினைக்கும்படி மக்களினங்களை மோசம் போக்கிற்று."[19] அது "தனது தவறான தர அளவைகள் மற்றும் பொருளை ஆராதித்தல்" ஆகியவற்றைத் தழுவிக்கொள்ளும்படி மக்களினங்களை வசீகரித்தது.[20]*

*நன்மை அல்லது கேடு என்பதற்குச் செல்வாக்கைக் கொண்டிருந்த முதலாவது அல்லது கடைசியான இடமாக ரோமாபுரி மாத்திரம் இருந்ததில்லை. ஒவ்வொரு நகரமும் - மற்றும் ஒவ்வொரு குடிமகனு[ளு] ம் - உதவி செய்யக்கூடிய அல்லது துன்புறச் செய்யக்கூடிய செல்வாக்கைக் கொண்டுள்ளது [கொண்டுள்ளனர்]. நேர்மறையான செல்வாக்கின் வல்லமையை வலியுறுத்துவதற்கு இயேசு, உப்பு மற்றும் ஒளி ஆகியவற்றை விவரிப்பாகப் பயன்படுத்தினார் (மத்தேயு 5:13-16). எதிர்மறையான செல்வாக்கின் செயல்வலிவை வலியுறுத்துவதற்குப் பவுல், புளிப்புமாவு என்ற விவரிப்பைப் பயன்படுத்தினார் (1 கொரிந்தியர் 5:6; கலாத்தியர் 5:9). எலிகூ பர்ரிட் என்பவர், ''மனிதகுலத்தின் சந்தோஷத்தினுடைய முழுமையைக் கூட்டுதல் அல்லது குறைத்தல் என்பதைச் செய்யக்கூடாத படிக்கு எந்த மனிதனும் இந்த பூமியில் வர இயலாது"[21] என்று கூறினார்.*

*நீங்கள் செல்வாக்குக் கொண்டிருப்பதில்லை என்று நீங்கள் நினைக்கலாம், ஆனல் நீங்கள் செல்வாக்கைக்கொண்டவர்களாகவே இருக்கின்றீர்கள். "மிகவும் சின்னஞ்சிறிய தலைமுடியும்கூட ஒரு நிழலை ஏற்படுத்துகிறது." ஞானமுள்ளவர்கள் தங்கள் செல்வாக்கை, இடித்துக் கீழே தள்ளுவதற்கல்ல, ஆனால் கட்டி மேலே எழுப்புவதற்கே பயன்படுத்து கின்றனர்.*

## *பிரபலமாயிருத்தல், ஆனால் அகந்தையுடன் இருத்தல் (18:7)*

*பழங்காலப் பழமொழியொன்று, "எல்லாச் சாலைகளும் ரோமாபுரி நோக்கியே செல்லுகின்றன'' என்று உரைக்கிறது. பழங்கால ரோம, அரசவையின் இருதயம் போன்ற மையப்பகுதியில் இருந்த "பொன்னால் ஆன மைல் கல் தூணின்" சிதிலங்களிடத்தில் நான் நின்றிருந்தேன். இந்த மைல் கல் மீது, பிரதான அச்சுப்போன்ற இந்த நகரத்துடன் இணைக்கப் பட்ட, பேரரசின் பிரதான வெளியெல்லைகளுக்கான தூரங்கள் செதுக்கப்பட்டிருந்தன. ரோமாபுரியானது பல இலட்சக்கணக்கான மக்கள்*

விரும்பிய அடைவிடமாய் இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, ரோமாபுரியின் பிரபலத்தன்மையானது அதை மேட்டிமையால் நிரப்பியிருந்தது. 7ம் வசனம், ''அவள் தன்னை மகிமைப்படுத்தி, … நான் இராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன், நான் கைம்பெண்ணல்ல,[22] நான் துக்கத்தைக் காண்பதில்லை[23] யென்று அவள் தன் இருதயத்திலே எண்ணினாள்'' என்று உரைக்கிறது. ''நான் தொடர்ந்து அரசாளுவேன், நான் ஒருக்காலும் மரிப்பதில்லை, என் பிள்ளைகளும் ஒருக்காலும் மரிப்பதில்லை'' என்பது அவளது எண்ணப்போக்காய் இருந்தது. ஃபிளேவியன் அரசபரம்பரையினர், ''நித்திய நகரம்'' என்ற சொற்றொடரைத் தங்கள் கொள்கையாகத் தழுவியிருந்தனர்; இவ்வார்த்தைகள் நாணயங்களில் செதுக்கப்பட்டு, கல்வெட்டுகளிலும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ரோமாபுரியானது அழகாயிருந்ததோ, வல்லமைநிறைந்ததாயிருந்ததோ அல்லது பிரபலமானதாக இருந்ததோ அதன் பிரச்சனையாக இருக்கவில்லை, ஆனால் அது தனது கொடைகளுக்குத் தேவனே ஆதாரமூலம் என்பதை ஒப்புக்கொள்ளாதிருந்ததே அதன் பிரச்சனையாயிருந்தது. அது தன்னை சுயநிறைவுடையதென்று நினைத்திருந்தது. G. B. கேயர்டு என்பவர், ''வெறும் முரட்டுத்தனமல்ல, ஆனால் தனது சுயமான, தீர்ந்துபோகாத ஆதாரமூலங்களின்மீது கேள்விகேட்கப்பட இயலாத விசுவாசமும், அத்துடன் ஆழமான அசிரத்தையின் உணர்வுமே'' அதன் தவறாயிருந்தது என்று குறிப்பிட்டார்.[24]

ரோமாபுரியைப் பொறுத்தமட்டில் உண்மையாய் இருந்தது எதுவோ, அது பல தனிநபர்களைப் பொறுத்தமட்டிலும் உண்மையாக உள்ளது. நான் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்தபோது, தேவனின்றியே சமாளித்துக்கொள்ள முடியும் என்று நினைத்திருந்த பலரை நான் சந்தித்தேன். சிலர் ''எங்களுக்குச் சூரியனும், நீர்ச்சருக்கும் சமூகப் பாதுகாப்பும் உள்ளன; எங்களுக்குத் தேவன் எதற்காகத் தேவை?'' என்ற எண்ணப்போக்கு உடையவர்களாகக் காணப்படுகின்றனர். அந்தக் கண்ணோட்டமானது ஆஸ்திரேலியாவில் மாத்திரமல்ல, ஆனால் உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் மேலோங்கியுள்ளது. சமுதாயமானது, மோசமான ஒவ்வொரு விஷயத்திற்காகவும் தேவனைக் குற்றம் சாட்டி, நன்மையான விஷயங்கள் எதற்கும் தங்களுக்குத் தாங்களே பாராட்டிக் கொள்பவர்களால் நிறைந்து இருக்கிறது.

ஞானியாயிருந்த மனிதர், ''அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை'' என்று கூறினார் (நீதிமொழிகள் 16:18; KJV). அந்த சத்தியம், ரோமாபுரி நகரத்தால் அளவையியல் ரீதியாகத் செயல்விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. 1முதல் 8வரையுள்ள வசனங்களின் படி, ரோமாபுரியின் அகந்தையே அதன் வீழ்ச்சிக்கு முதன்மையான காரணமாய் இருந்தது. அதன் முரட்டுத்தனத்தில் இருந்து, ''வானபரியந்தம் எட்டிய'' மற்றும் விரைவில் தேவனால் ''நினைவுகூரப்படவிருந்த'' நூற்றுக்கணக்கான மற்ற பாவங்கள் வெளிக்கிளம்பின. ரோமாபுரி தன்னைத்தானே ''நித்தியமானது'' என்று நினைத்துக்கொண்டு இருந்தது; ஆனால் அது தன்னை மாறுபட்ட வகையில் கண்டறியும்.

*கவிஞர் பெர்சி B. ஷெல்லி என்பவர், ஒரு மிகப்பெரிய, சிதிலமான சிலையைப் பற்றி - "பாலைவனத்தில் நின்றிருந்த இரு மாபெரும் மற்றும் அடிப்பாகம் இல்லாத, கல்லால் ஆன கால்கள்" என்று - எழுதி இருந்தார். அந்தக் கால்களின் அருகில், மணலில் பாதி புதையுண்ட நிலையில், அடிபட்டுச் சிதைவுற்ற கல்லினால் ஆன தலையானது "எரிச்சலும் சுளிப்பும் கொண்ட உதடும், கடுமையான கட்டளையின் இகழ்ச்சிக் கனைப்பும்" கொண்டதாகக் கிடந்தது.*

> *பீடத்தின் அடியில் பின்வரும் வார்த்தைகள் இருந்தன:*
> *"என் பெயர், இராஜாதி இராஜா ஓசிமென்டியஸ்;*
> *பலவான்களே, வருத்தம் உடையவர்களே,*
> *என் வேலைகளைப் பாருங்கள்."*

*ஷெல்லி பின்வருமாறு முடித்தார்,*

> *பின்னால் எதுவும் எஞ்சுவதில்லை. மிகப்பெரும் பேரழிவைச் சுற்றிலும், எல்லையற்ற மற்றும் வெறுமையான தனிமை, மற்றும் சமதள மணலானது தொலைதூரம் வரை நீண்டுள்ளது.[25]*

*கவிஞரால் விவரிக்கப்பட்டுள்ள, கைவிடப்பட்ட பேரழிமானத்தைப் பற்றிப் புரிந்துணருங்கள். பின்பு, வெளிப்படுத்தின விசேஷம் 18:2, 22, 23ல் உள்ள கைவிடப்பட்ட நகரத்தைக் கண்ணோக்குங்கள். அகந்தையின் பின்விளைவை அறிந்துகொள்ளுங்கள். பழைய ஏற்பாடு, "மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான்" என்று போதிக்கிறது (நீதிமொழிகள் 29:23). புதிய ஏற்பாடு, "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று கூறுகிறது (லூக்கா 14:11). நாம் ஒவ்வொருவரும் நமது தேவனுடன் தாழ்மையாய் நடப்போமாக (மீகா 6:8).*

## வளமிக்கது, ஆனால் செல்வச் செருக்குள்ளது *(18:3, 7, 9, 12-14)*

ரோமாபுரி விழுந்து போவதற்கு அகந்தை [ஒரு] காரணமாய் இருந்தது. *7ம் வசனத்தை மீண்டும் வாசித்து, இன்னும் ஒரு காரணத்தைக் கவனியுங்கள்:[26] "அவள் தன்னை மகிமைப்படுத்திச் செல்வச்செருக்காய் வாழ்ந்[தாள்].*"[27] *என்னிடத்தில் உள்ள* NASB வேதாகமப் *பிரதியில்,* [செல்வச் செருக்கு என்பதற்கு] "sensuously": "Or, luxuriously" *என்ற பக்க ஓரக்குறிப்பு உள்ளது. "அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால்" என்று கூறும் 3ம் வசனத்திலும், "அவளுடனே ... செல்வச்செருக்காய் வாழ்ந்த பூமியின் இராஜாக்களும்" என்று கூறும் 9ம் வசனத்திலும் இதே அடிப்படைச் சொற்றொடர்தான் காணப்படுகிறது.*

"செல்வச் செருக்கு" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க*

வார்த்தைகள், புதிய ஏற்பாட்டில் இவ்விடங்களில் மாத்திரமே காணப்படுகின்றன. I. T. பெக்வித் என்பவர், இவ்வார்த்தைகள் "மிதமிஞ்சிய ஆடம்பரம் மற்றும் சுயசந்தோஷத் திளைத்தல் ஆகியவற்றுடன் முரட்டுத்தனமும் பலத்தின் செருக்கான தன்மையும் இணைந்த நிலை" என்ற கருத்தை அடக்கியுள்ளன என்று கூறினார்.[28] இதற்கான கிரேக்க மூலவார்த்தை, "மற்றவர்கள் பொருளற்ற நிலையில் இருக்கையில், ஆடம்பரத்தில் அகந்தையுடன் வாழுதல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. இது, உடமைகளையும் சந்தோஷங்களையும் வாழ்வில் மிகவும் முக்கியமான விஷயங்களாக்குதல் மற்றும், பிறருடைய தேவைகளைக் கண்டுகொள்ளா திருத்தல் என்று அர்த்தப்படுகிறது."[29]

ரோமாபுரியில் இருந்த பலருக்கு, "செல்வச் செருக்காக வாழ்பவர்" என்பது ஏற்புடைய விவரிப்பாக உள்ளது.

> இந்த முதல் நூற்றாண்டில் உலகமானது தனது செல்வங்கள் யாவற்றையும் ரோமாபுரியின் மடியில் ஊற்றிக்கொண்டிருந்தது … . "நீண்ட சமாதானம், கடல்களில் பாதுகாப்பு, வர்த்தகத்தில் சுதந்திரம் ஆகியவை ரோமாபுரியை, பிரிட்டிஷ் கால்வாய் தொடங்கி கங்கை நதி வரையில் இருந்த நாடுகளின் தனித்தன்மை வாய்ந்த உற்பத்திப் பொருட்கள் மற்றும் நுட்பமானவற்றின் வர்த்தக மையமாக்கி யிருந்தன."[30]

உலகமுழுவதிலும் இருந்து ரோமாபுரியின் துறைமுகத்திற்குள் வந்த இறக்குமதிப் பொருட்களின் மாதிரியை 11முதல் 13வரையுள்ள வசனங்கள் தருகின்றன:

> … பொன்னையும், வெள்ளியையும், இரத்தினங்களையும், முத்துக் களையும், சல்லாவையும், இரத்தாம்பரத்தையும், பட்டாடை களையும், சிவப்பாடைகளையும், சகலவித வாசனைக் கட்டை களையும், தந்தத்தினால் செய்திருக்கிற சகலவித வஸ்துக்களையும், விலையுயர்ந்த மரத்தினாலும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் வெள்ளைக் கல்லினாலும் செய்திருக்கிற சகலவித வஸ்துக்களையும், இலவங்கப்பட்டையையும், தூபவர்க்கங்களையும், தைலங்களையும், சாம்பிராணியையும், திராட்சரசத்தையும், எண்ணெயையும், மெல்லிய மாவையும், கோதுமையையும், மாடுகளையும், ஆடுகளையும், குதிரைகளையும், இரதங்களையும் … .[31]

பொன், தந்தம், விலையுயர்ந்த மரங்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் கோதுமை ஆகியவை வட ஆப்பிரிக்காவில் இருந்து வந்தன; விலையுயர்ந்த கற்கள் மற்றும் முத்துக்கள் ஆகியவை இந்தியாவில் இருந்து வந்தன; பட்டு மற்றும் வாசனைத் திரவியங்கள் சீனாவில் இருந்து வந்தன; வெண்கலம் கொரிந்துவில் இருந்து வந்தது; இரும்பு கருங்கடல் பகுதி மற்றும் ஸ்பெயின் ஆகிய இடங்களில் இருந்து வந்தது; தூபவர்க்கமும் சாம்பிராணியும் அரேபியாவில் இருந்து வந்தன; வெள்ளைப்போளம் மேதியாவிலிருந்தும் குதிரைகள் அர்மீனியாவில் இருந்தும் வந்தன;

இரதங்கள் காவ்ல் என்ற நாட்டில் இருந்து வந்தன. இருப்பினும் இவைகள் உண்டாக்கப்பட்ட நாடுகளைக் காட்டிலும், பட்டியலிடப்பட்ட பொருட்களில் பெரும்பான்மையானவைகள் ஆடம்பரப் பொருட்களாய் இருந்தன என்ற உண்மையானது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

ரோமாபுரியானது புதிய மற்றும் மாறுபட்ட பொருட்கள் மீது திருப்தியடையாத பேராவல் கொண்டதாயிருந்தது. அது பேராவலுடன் கவர்ந்துகொண்ட சுவைமிக்க பழங்களையும்[32] “கொழுமையானவை களையும், சம்பிரமமானவைகளையும்” பற்றி 14ம் வசனம் குறிப்பிடுகிறது. “கொழுமையானவை” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, வினோதமான உணவுகளைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.[33] “சம்பிரமமானவை” என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது பகட்டான உடைகள் மற்றும் நகைகளைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.[34]

ரோமாபுரியின் மிதமிஞ்சிய பகட்டு ஆடம்பரங்கள், ஏறக்குறைய நம்பும் நிலைக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றன:

> நீரோவின் விருந்துகள் ஒன்றில், எகிப்திய ரோஜாப் பூக்கள் மாத்திரம் சுமார் நாற்பத்தி ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ளவையாக இருந்தன. விட்டேலியஸ், மயில்களின் மூளைகள் மற்றும் நைட்டிங்கேல் பறவையின் நாவுகள் போன்றவற்றை மகிழ்வின் பெருவிருப்பத்திற்காக கொண்டிருந்தான். ஒரு வருடத்திற்கும் குறைவான அவனது ஆட்சிக்காலத்தில், அவன் உணவு வகைகள் மீது மாத்திரம் ஏறக்குறைய தொண்ணூறு கோடி ரூாய்களைச் செலவிட்டான். ஒரு ரோம அதிகாரி அளவிடப்பட முடியாத செல்வங் களை ஊதாரியாய் செலவு செய்தபின்பு, கேவலமான தொகையாக 135 இலட்ச ரூபாய்கள் மாத்திரம் மீதி இருந்ததில் வாழமுடியாது என்று தீர்மானித்துத் தற்கொலை செய்துகொண்டான். தால்மூத் என்ற புத்தகத்தில், “பத்து மடங்கு செல்வம் உலகத்திற்கு வந்திறங்கிற்று: அவற்றில் ஒன்பது மடங்கை ரோமாபுரி பெற்றது. மற்றும் உலகத்தின் எஞ்சிய பகுதிகள் யாவையும் ஒரு மடங்கைப் பெற்றன” என்று எழுதப்பட்டுள்ளது.[35]

பழங்கால எழுத்தாளரான லிவி என்பவர், பேராசையையும் ஆடம்பரத்தையும் “மாபெரும் நாடு ஒவ்வொன்றையும் எப்போதும் அழித்துள்ள அந்தக் கொள்ளை நோய்கள்” என்று அழைத்தார்.[36] பவுல் சிலரை, “தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராய் [இருந்து]” என்று விவரித்தார் (2 தீமோத்தேயு 3:4). இவ்விரு எழுத்தாளர்களுமே ரோமாபுரியின் குடிமக்களைத் தங்கள் சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம்.

அனேகமாக நம்மில் எவரும், ரோமாபுரியின் மிதமிஞ்சிய தன்மை மற்றும் வீணாக்கும் தன்மை ஆகியவற்றை ஒருக்காலும் அணுகமாட்டோம்; ஆனால் நமக்கு நாமே நேர்மையானவர்களாய் நாம் இருந்தால், தேவன் நம்மீது பொழிந்துள்ள ஆசீர்வாதங்களுக்கு நல்ல உக்கிராணக்காரர்களாய் இருக்கச் சில வேளைகளில் நாம் தவறியிருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். வீணாக்குதல் என்ற தன்மைக்கு எதிராக வேதாகமம் நமக்குப் போதிக்கிறது

*(லூக்கா 15:13);*[37] *இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தபின் எஞ்சியவற்றைச் சேகரித்து வைத்தார் (மத்தேயு 14:20).*

*தேவன் நமது கரங்களில் இட்டுள்ள யாவற்றையும் பேணிக்காத்துக் கொள்ளுதல் பற்றிய வழிகாட்டுதல்களுக்கு, தன் எஜமானனின் ஆஸ்திகளை ஊதாரித்தனமாய் செலவிட்டது குறித்துக் கணக்கு ஒப்புவிக்கும்படி அழைக்கப்பட்ட உக்கிராணக்காரன் பற்றிய உவமையை ஆழ்ந்து சிந்தியுங்கள் (லூக்கா 16:1). இயேசு பின்வருமாறு கூறினார்,*

> *அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிரா விட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மை யுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்? எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது, ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது (லூக்கா 16:11-13).*

*மத்தேயு 16:26ம் ஏற்புடையதாக உள்ளது: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?"*

## மேன்மை மிக்கது, ஆனால் இரக்கமற்றது *(18:11, 13, 17)*

*சுயநலமுள்ள தன்மை என்பது 18ம் அதிகாரம் முழுவதிலும் பாய்ந்தோடும் ஆய்வுப்பொருளாகும். ரோமாபுரியின் பிரச்சினையானது, லூக்கா 16:19-31ன் ஐசுவரியமுள்ள மனிதனைக் கொண்டோ அல்லது லூக்கா 12:16-21ல் "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம்பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து பூரிப்பாயிரு" (வசனம் 19) என்று கூறிய, செல்வந்த னாயிருந்த மதியீனனைக் கொண்டோ விவரிக்கப்பட முடியும். இவ்விருவருமே பிறரைப் பற்றியல்ல, ஆனால் தங்களைப் பற்றியே அக்கறை கொண்டிருந்தனர் - அதுவே ரோமாபுரியை பொறுத்தமட்டிலும் உண்மை யாயிருந்தது.*

*உதாரணத்தின்மூலம் ரோமாபுரியானது, மற்றவர்கள் சுயநலத்துடன் இருக்கும்படி போதித்தும் இருந்தது. அது விழுந்தபோது, யாரையெல்லாம் அது தனது நண்பர்கள் என்று எண்ணியிருந்ததோ, அவர்கள் யாவரும், அதன் வீழ்ச்சியானது தங்களை எவ்வாறு பாதித்தது என்பதைப் பற்றி கவலைப்பட்டதை காட்டிலும் அதிகமாக அதன் வீழ்ச்சியைப் பற்றிக் கவலைப்படவில்லை (வசனங்கள் 11, 17ஐக் காணவும்).*

*ரோமாபுரியின் கடுமையான சுயநலத்தன்மையானது ஒருவேளை, 12முதல் 13ம் வசனங்களில் காணப்படுகிற இறக்குமதிப்பொருள்களின் கடைசியான விபரங்களில் மிகச்சிறந்த வகையில் காணப்படலாம் (இதற்கு முன் நான் இந்தப்பொருள்கள் பற்றி குறிப்பைத் தராதிருந்தேன்). இந்தப் பட்டியலானது "குதிரைகளையும், இரதங்களையும், அடிமைகளையும், மனுஷருடைய ஆத்துமாக்களையும் ...''[38] என்பதுடன் முடிவடைகிறது. ரோமாப்பேரரசில் உயிர் என்பது விலைமலிவானதாக இருந்தது.*

> *ரோமாபுரியின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அடிமைத் தனத்திற்கு உட்படுத்தப்பட்டு இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது;[39] மற்றும், பேரரசின் மாபெரும் சந்தைகளில் ஒரே நாளில் 10,000 மனிதப் பிறவிகள் ஏலம் விடப்படுதல் என்பது வழக்கத்திற்கு மாறான காட்சியாக இருந்ததில்லை. அனேகமாக, பேரரசு முழுவதிலும் ஆறு கோடிக்கும் அதிகமான அடிமைகள் இருந்திருக்கலாம், இவர்கள் வீட்டு உபயோகப்பொருள்களைப் போல் வாங்கப்பட்டு, விற்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு மற்றும் தவறாக பயன்படுத்தப் பட்டு இருந்தனர்.[40]*

*''மனிதர்களின் உடல்களும் ஆத்துமாக்களும்''[41] என்பது, ''அடிமை களையும், மனுஷருடைய ஆத்துமாக்களையும்'' என்பதன் நேரடி அர்த்தமான ஒரு மொழிபெயர்ப்பாக இருக்கும். இது, அடிமைகளின் எஜமானர்கள், மக்களின் உடல் மற்றும் ஆத்துமா ஆகியவற்றைத் தாங்கள் சொந்தம் கொண்டிருந்ததாக நினைத்த உண்மையைப் பிரதிபலிக்கலாம். ஹென்றி ஸ்வீட் என்பவர், வெறுப்பு நிறைந்த இந்த சொற்றொடர்கள் ''மனிதக் கால்நடைகள்'' என்று அர்த்தப்படுத்தின மற்றும் இவை "செல்வந்தர்களின் [வீட்டாரால்] பெருமளவில் பணிக்கமர்த்தப்பட்டு மனித வாழ்வைத் தியாகம் செய்தல், [விபசார இல்லங்களை] நிரப்புதல், மற்றும் ஆம்ப்பி தியேட்டரில் மிருகத்தனமான சந்தோஷத்திற்குப் பணியாற்றுதல்" என்பவற்றைக் குறிப்பிட்டன[42] என்று எழுதினார்.*

*ரோமாபுரி தனது மாற்றுப்பிரதியை இன்றைய நாட்களில் உலகத்தில் கொண்டுள்ளதா? மனித உயிருக்கு மதிப்பளிக்காதவர்களை இன்றைக்கும் நாம் கொண்டுள்ளோமா? பணம் ஈட்டுதல் என்பதில் மாத்திரமே அக்கறை உடையவர்களாய் இருந்து, தங்கள் வாழ்வுநடையானது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றிச் சிந்திக்காத அல்லது ஓரளவே சிந்திக்கிற நபர்கள் இன்னமும் இருக்கின்றனரா? ''பலவீனர்களை சுயநலநோக்கத்துடன் உறிஞ்சி, போதை மருந்துகளைக் கடத்தி, ஆபாச இலக்கியத்தைப் பரப்பி, பல இலட்சக்கணக்கான மக்களை மோசம் போக்குகின்றவர்களை" பற்றி நான் நினைத்துப் பார்க்கின்றேன்.[43] பின்பு, யுத்தங்களை நீட்டித்து, ஆயிரக்கணக்கானவர்களின் மரணத்தை விளைவிக்கும் ஆயுதங்களை விற்றுப் பெரும்பொருள் ஈட்டுபவர்கள் உள்ளனர். விபசாரம், சூதாட்டம், மற்றும் பிற அடாவடித்தனமான பொழுதுபோக்கு வியாபாரங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட முடியும்.[44]*

இருப்பினும் நாம், நமது பாடத்தை முடிக்க வேண்டியுள்ளது: நீங்களும் நானும், எப்போதாவது அடிப்படையில் மற்றவர்களைக் குறித்து நினைப்பதற்குப் பதிலாக நம்மைப் பற்றி நினைத்துக் குற்ற உணர்வுடைய வர்களாக இருந்திருக்கின்றோமா? இந்தக் கேள்வியைக் கேட்டல் என்பது இதற்குப் பதில் அளிப்பதாக உள்ளது. "தற்பிரியராய்" (2 தீமோத்தேயு 3:2) இருத்தல் என்பதைத் தவிர்ப்பதற்காகப் போராடுதலென்பது மாபெரும் யுத்தங்களில் ஒன்றாக உள்ளது. ஹென்றி வார்டு பீச்செர் என்பவர், சுயநலத்தை "எவரொருவரும் மற்றவர்களிடத்தில் இருக்கையில் மன்னிக் காததும் மற்றும் எவரொருவரும் நிச்சயமாகவே விட்டு விலகியிராத, அருவருக்கத்தக்க பாவம்" என்று அழைத்தார்.[45]

பிலிப்பியர் 2:3, 4ல் பவுல் பின்வரும் நிறைவான அறைகூவலை முன்வைத்தார்: "ஒன்றையும் ... வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மை யானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளை நோக்குவானாக." சுயநலமற்ற அன்பிற்கு, இயேசுவை பரிபூரணமான எடுத்துக்காட்டாக அவர் சுட்டிக்காண்பித்தார் (வசனங்கள் 5-8).

யோவான், "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?" என்று எழுதினார் (1 யோவான் 3:17). தேவையில் இருந்தவர்களை ரோமாபுரி புறக்கணித்திருந்தது. இயேசுவைப் பின்பற்று பவர்கள் என்ற வகையில் நாம் இவ்வாறு செய்யத் துணியாதிருப்போமாக.

## சிலாக்கியம் பெற்றது, ஆனால் உபத்திரவப்படுத்திற்று (18:24)

ரோமாபுரியானது கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்திய விஷயம்தான் அதன் பாவங்களின் கோபுரத்தினுடைய தலையுச்சிக் கல்லாக இருந்தது. இதை ரோமாபுரி தனிப்பட்ட வகையில் செய்தது, மற்றும் அதுபோலவே செய்யும்படி பேரரசு முழுவதிலும் இருந்த மற்றவர்களையும் அது இணங்க வைத்தது. இவ்வதிகாரத்தின் முடிவில், ரோமாபுரியானது "தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய[46] இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது"[47] என்பதால் அந்த நகரம் அழிக்கப்படும் என்று தூதன் விளக்கப்படுத்தினார் (வசனங்கள் 23ஆ, 24).

சந்தர்ப்பப்பொருளில், "பூமியில் கொல்லப்பட்ட அனைவரும்"[48] என்பது, வேதசாட்சியாக மரித்திருந்த தேவனுடைய மக்கள் அனை வரையும் குறிக்கிறது. இவர்கள் ஒவ்வொருவரும் ரோமாபுரியிலேயே கொல்லப்பட்டிருந்ததில்லை; ஆனால் இராபர்ட் மவுன்ஸ் என்பவர், "ரோமாபுரியானது முழு உலகத்தையும் இராஜரீகமாக ஆட்சிசெய்து கொண்டிருந்தபடியால், அதனுடைய குற்றமானது பூமியில் [தேவ

வசனத்தினிமித்தம்] கொல்லப்பட்ட யாவர்சார்பாகவும் விரிந்திருந்தது. எங்கெல்லாம் உயிர்பலி [மனிதர்களைக் கொல்லுதல்] நடைபெற்றதோ, அதற்கெல்லாம் பொறுப்பு ரோமாபுரி நாட்டின் கதவின் அருகில் இருந்தது"[49] என்று சுட்டிக்காண்பித்தார்.

ஆபேலின் இரத்தம் பூமியில் இருந்து கூப்பிட்டதுபோல் (ஆதியாகமம் 4:10), வேதசாட்சிகளாக மரித்தவர்களுடைய இரத்தம் பழிவாங்குதலுக்காகக் கூப்பிட்டது (வெளிப்படுத்தின விசேஷம் 6:9, 10ஐக் காணவும்). நியாயம் ஏற்படுத்தப்படும். தராசு தட்டுகள் சமானமாக்கப்படும்.

## முடிவுரை

நமது அடுத்த பாடத்தில் நாம், ரோமாபுரி கொடுத்திருந்ததற்குத் தக்கவாறு தேவன் அதற்குத் திருப்பி செலுத்தியபோது, தராசுத் தட்டுகள் சமானமாக்கப்பட்டது எவ்வாறு என்பது பற்றிக் கலந்துரையாடுவோம் (18:6, 7); ஆனால் இப்போதைக்கு நான், ரோமாபுரி ''தராசிலே நிறுக்கப்பட்டுக் குறைவாய்க் காணப்பட்டது" ஏன் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். நமது வேதவசனப்பகுதியானது குறைந்தபட்சம் ஆறு காரணங்களை ஆலோசனையாகத் தெரிவிக்கிறது: அது அழகாய் இருந்தது, ஆனால் அதன் பாவங்கள் வான பரியந்தம் எட்டியிருந்தன, அது வல்லமை நிறைந்ததாயிருந்தது, ஆனால் அது தனது செல்வாக்கை நற்செயல்களுக்குப் பதிலாக தீய செயல்களுக்குப் பயன்படுத்தியிருந்தது, அது பிரபலமாயிருந்தது, ஆனால் அகந்தையினால் நிறைந்திருந்தது. அது செல்வமிக்கதாயிருந்தது, ஆனால் நம்பமுடியாத அளவுக்கும் அதிகமாக வீணாக்கும் தன்மை கொண்டிருந்தது. அது வெற்றிகரமானதாயிருந்தது, ஆனால் மற்றவர்களைக் குறித்துக் கவலைப்படாதிருந்தது. பரிசுத்தவான்களைக் கொலை செய்திருந்தது என்பது கடைசிக் காரணியாக இருந்தது (இது தராசுத்தட்டின் முள்ளை "குற்றம்" என்பதற்கு நகர்த்துவதற்கு இது ஒன்றே போதுமானதாக இருந்தது).

என்னைத் தவறாக புரிந்துகொள்ளாதீர்கள். அழகுநிறைந்து, வல்லமை நிறைந்து, பிரபலமாக, செல்வந்தராக அல்லது வெற்றிநிறைந்து இருப்பதில் - நமது ஆசீர்வாதங்கள் தேவனிடத்தில் இருந்து வருகின்றன என்று ஒப்புக்கொண்டிருக்கும் வரைக்கும், மற்றும் அவற்றை நாம் அவரை மகிமைப்படுத்தவும், நமது மற்றும் பிறருடைய வாழ்வை ஆசீர்வதிக்கவும் பயன்படுத்தும் வரைக்கும் - தவறு எதுவும் இல்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். மிகவும் அடிக்கடி, விஷயம் இவ்விதமாக இருப்பதில்லை. பவுல், ''ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதகமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்'' என்று கூறினார் (1 தீமோத்தேயு 6:9). இதேகூற்றை, வாழ்வில் அழகுமிகுந்து, வல்லமைமிகுந்து, பிரபலமாகி, அல்லது வெற்றி நிறைந்திருப்பதை மாத்திரமே நோக்கமாகக் கொண்டிருப்பவர்களைப் பற்றியும் ஏற்படுத்தலாம்.

*இனிவரும் பாடம் ஒன்றில் நாம், 4ம் வசனத்தின் புத்திமதியை வலியுறுத்துவோம்: "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், ... அவளைவிட்டு வெளியே வாருங்கள்.'' நமது தற்போதய பாடத்தின் வலியுறுத்தம் குறித்து, நாம் பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தலாம்: பாபிலோனின் தராதர அளவைகளை ஏற்றுக்கொள்ளாதிருங்கள். பாபிலோன்/ரோமாபுரி என்பது இன்றைய நாட்களில் நம்மைக் கவர்ந்து இழுக்கும் உலகத்தைக் குறித்து நிலைநிற்கிறது. அதனுடைய மதிப்பீட்டு அமைப்பு முறையை ஏற்றுக்கொள்ளாதிருக்கும் படி நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். இதைப் பவுல் பின்வருமாறு குறிப்பிட்டார்: "நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமலும், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2).*

*நாம் கர்த்தரிடமாய் ஓடிச்சென்று அவரைப் பற்றிக்கொள்ளக் கடவோம், இல்லையென்றால் நாமும்கூட, "தராசிலே நிறுக்கப்பட்டு குறைவாய்க் காணப்படுவோம்."*[50]

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*விருப்பப்பட்டால் 18ம் அதிகாரத்தை ஒரே பாடத்தில் எடுத்துரைத்து முடிக்கலாம். "தேவன் விளக்குகளை அணைக்கின்றபோது" என்ற பாடத்தை உங்கள் அடிப்படை வரைக்குறிப்பிற்குப் பயன்படுத்தவும். பின்பு இந்தப்பாடத்தில் இருந்தும், இப்புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்ற பாடத்திலிருந்தும் குறிப்புகளைக் கூட்டிக்கொள்ளவும்.*

---

*குறிப்புகள்*

*[1]இது போன்ற விருந்துகள்/பண்டிகைகள் மகிழ்ச்சி ஆரவாரமிக்கவைகளாய் இருந்தன, இவை பெரும்பாலும் பல நாட்கள் அல்லது வாரங்கள் வரையிலும் நீடித்தன. இதை ஒரு "குடிவெறி ஆட்டம்" என்று குறிப்பிடுதலும் ஏற்புடையதாகவே உள்ளது. [2]இது தானியேல் 5:4ன் தெளிவான மொழிநடையில் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது: எருசலேமில் இருந்த ஆலயம் அழிக்கப்பட்டிருந்தபடியால், இஸ்ரவேல் மக்களின் தேவன் தங்கள் தேவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவராயிருந்தார் என்று அவர்கள் நம்பியிருந்திருக்கலாம். [3]"மெனே" என்பது "எண்ணுதல்" என்று அர்த்தப்படும் எபிரெய வினைச்சொல்லின் வடிவமாயிருக்கிறது. [4]"தெக்கேல்'' என்பது அனேகமாக, ''நிறுக்கப்படுதல்'' என்று அர்த்தப்படும் எபிரெய வினைச்சொல்லில் இருந்து வருவதாக இருக்கலாம். [5]"உப்பார்சின்'' என்பது இரட்டை அர்த்தம் கொண்டுள்ளது. இது, "பிரித்தல்" என்று அர்த்தப்படும் எபிரெய வினைச்சொல்லில் இருந்து வருவதாக உள்ளது. மேலும், எபிரெய மொழியில் இதனு*

டன் தொடர்புடைய வடிவமாகிய *peres (வசனம் 28ஐக் காணவும்)* என்பது "Persians" *என்பதற்கான வார்த்தையைப் போன்றதாக உள்ளது (வசனம் 28ஐ மீண்டும் காணவும்).* [6]*"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "பாபிலோன் உங்களை மோசம்போக்க முயற்சி செய்யும்போது" என்ற பாடத்தில் காணவும்.* [7]Daniel Russell, *Preaching the Apocalypse* (New York: Abingdon Press, 1935), 206. [8]*18ம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் ரோமாபுரிக்குக் கச்சிதமாகப் பொருந்துகின்றன - இது யோவானின் நாட்களில் ரோமாபுரி நகரமே "மகாபாபிலோன்" என்பதாக இருந்தது என்பதற்குக் கூடுதலான நிரூபணமாகும்.* [9]*பழங்கால உலகத்தில் முத்துக்கள் விசேஷித்த விதமாக விலைமதிக்கப்பட்டன (21:21ஐக் காணவும்).* [10]Edgar Allan Poe, "To Helen" (1831), st. 2. Quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations,* 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 451.

[11]E. A. Judge, "Rome," *Baker Encyclopedia of Bible Places,* consulting ed. John J. Bimson (Grand Rapids, Mich.: Baker Books, 1995), 268. [12]*18ம் அதிகாரமானது பழைய ஏற்பாட்டில் இருந்து எடுத்தாளப்படும் மேற்கோள்களில் பெரும் தொகுப்பாக உள்ளது, அதிலும் சிறப்பாக, பாபிலோன் மற்றும் தீரு ஆகியவற்றின் அழிவைப் பற்றி அறிவித்த வசனப்பகுதிகளில் இருந்து மேற்கோள்கள் பிரதானமாகத் தொகுக்கப்பட்டு உள்ளன. எடுத்துக்காட்டாக, இவ்வசனப்பகுதியானது எரேமியா 51:9ஐப் பிரதிபலிக்கிறது (எஸ்றா 9:6ஐக் காணவும்). பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் சில இந்தப் பாடத்திலும் மற்ற சில அடுத்த பாடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அதிகாரத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த அம்சம், அடுத்த பாடத்தில் இன்னும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.* [13]"Piled up" *என்பது "ஒன்றாக ஒட்டுதல்" என்ற நேரடி அர்த்தம் தருகிற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.* [14]Thomas Fuller, "The Holy State and the Profane State" (1642). Quoted in Lewis Copeland, ed., *Popular Quotations for All Uses*, rev. ed. (Garden City, N.Y.: Doubleday & Co., 1961), 414. [15]William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 145. *"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும், "பாபிலோன் உங்களை மோசம்போக்க முயற்சி செய்யும்போது" என்ற பாடத்தில், ரோம வரலாற்றாளர்களிடமிருந்து பெறப்பட்ட சில உதாரணங்களும் மேற்கோள்களும் உள்ளன.* [16]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 226. *பவுல் சென்ற கப்பல் புத்தயோலி என்ற துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது. புத்தயோலி என்பது எகிப்து மற்றும் கிழக்குப் பகுதிகளில் இருந்து வந்த பயணிகளை இறக்கிவிடும் முக்கிய துறைமுகமாய் இருந்தது. தைபர் நதியின் முகத்துவாரத்தில் இருந்த ஆஸ்டியா என்ற இடமானது ரோமாபுரிக்கு வந்து சேர்ந்த சரக்குகளை இறக்கும் முதன்மை இடமாயிருந்தது.* [17]*"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் உள்ள "மகா வஞ்சனையாளன்" என்ற பாடத்தில் காணவும்.* [18]Caird, 231. [19]George Eldon Ladd, *A Commentary on the Revelation of John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 238-43. [20]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 372. *நீங்கள் வாழும் சமுதாயத்திற்கு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த - மற்றும், பொருளாதார சிந்தையானது அந்த சமுதாயத்தில் வாழ்பவர்களின் மீது எவ்வாறு செல்வாக்குக் கொண்டுள்ளது என்பதைப் பற்றியும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த - நீங்கள் விரும்பலாம். அமெரிக்காவில் உள்ள விளக்கவுரையாளர்கள் பலர், இதை அமெரிக்க நாட்டிற்கு நடைமுறைப்படுத்துகின்றனர்.*

[21]Quoted in Copeland, 243. [22]*"வேதாகம எழுத்தாளர்களின் நாட்களில் உலகத்தில்,*

ஒரு விதவை என்பவள், ஏழ்மை மற்றும் உதவியற்ற தன்மை என்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாய் இருந்தாள்" (G. R. Beasley-Murray, *The Book of Revelation,* The New Century Bible Commentary Series [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974], 266). [23]7ம் வசனத்தை ஏசாயா 47:7, 8உடன் ஒப்பிடவும். [24]Caird, 223. [25]Percy B. Shelley, "Ozymandias" (1817). Quoted in Bartlett, 406. [26]பாடத்தின் இந்தப் பகுதியானது நீங்கள் வாழும் இடத்தைப் பொறுத்து மாறுபட்ட நடைமுறைப்பயன்பாட்டைக் கொண்டிருக்கும். உலகத்தின் சில பகுதிகளில், பலர் ஆடம்பரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், சிலர் ஏழ்மையில் வாழ்கின்றனர். உலகத்தின் மற்ற பகுதிகளில், ஒரு சிலர் ஆடம்பரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில், பெரும்பான்மையானவர்கள் ஏழ்மையில் வாழ்கின்றனர். சூழ்நிலை எப்படியிருந்தாலும், சுயவிருப்பத்தில் மூழ்கியிருத்தலும் வீணாக்கும் தன்மையும் தவறானவைகளாய் இருக்கின்றன. இருந்தபோதிலும், மற்றவர்களைச் சுட்டிக்காட்டுவதைச் செய்வது என்பதில் மாத்திரம் அக்கறை கொண்டவர்களாய் இராமல் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். உரையைக் கேட்பவர்களுக்குத் தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துங்கள். நாம் ஒவ்வொருவரும், எவ்வளவுதான் அதிகம் அல்லது கொஞ்சம் பொருள் கொண்டிருப்பினும், மற்றவர்களின் தேவைகள் பற்றி விழிப்புணர்வுடையவர்களாய் இருக்க வேண்டும். [27]KJV வேதாகமத்தில் "lived deliciously" என்ற நேர்த்தியான சொற்றொடர் உள்ளது. [28]I. T. Beckwith, *The Apocalypse of John*, 713. Quoted in Robert Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 324. [29]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 615. [30]Barclay, 155.

[31]இங்கு பட்டியலிடப்பட்டுள்ளவை பற்றி (மூல கிரேக்க வார்த்தைகள் மற்றும் அவை உண்மையில் எதை அர்த்தப்படுத்துகின்றன என்பது பற்றி) மிக அதிகமாக எழுத முடியும். எடுத்துக்காட்டாக, "வாசனைக் கட்டை" என்பது அதன் முதிர்ச்சியினுடைய தனித்தன்மை வாய்ந்த வடிவமைப்புகளுக்காக மிகவும் விரும்பப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட மரத்தின் அரிய வகையாக இருந்தது. மீண்டுமாக, "இரதங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, மிகவும் செல்வந்தர்களுக்கென்று கட்டியெழுப்பட்ட நான்கு சக்கரங்களைக் கொண்ட அலங்கரிக்கப்பட்ட இரதங்களைக் குறிக்கிறது. இருப்பினும், பரிசுத்த ஆவியானவரால் ஏற்படுத்தப்பட்ட கருத்தைப் பெற்றுக்கொள்வதற்கு போதுமான அளவு தெளிவான ஆங்கில வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. [32]"பழங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே வருகிறது; இது பருவகாலங்களில் மாத்திரம் கிடைக்கக்கூடிய, கனிந்த அல்லது சாறுள்ள பழங்களைக் குறிக்கிறது. [33]இது, இவ்வதிகாரத்தின் வேறிடத்தில் "புலன் நுகர்ச்சிக்கு ஏற்ற" அல்லது "ஆடம்பரமான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையில் இருந்து வேறுபட்ட வார்த்தையாக உள்ளது. இந்த கிரேக்க வார்த்தை "கொழுமையானவைகள்" என்பவற்றை நேரடி அர்த்தத்தில் குறிப்பிடுகிறது, ஆனால் இது பல்வேறு மொழிபெயர்ப்புகளில், பரந்த அளவிலான ஆங்கில வார்த்தைகளைத் தரவழைத்துள்ளது. [34]இந்தக் கிரேக்க வார்த்தை "பிரகாசிப்பவை" பற்றிப் பேசுகிறது. [35]Mounce, 329. ரோமாபுரியின் ஆடம்பரம் மற்றும் களிவெறியாட்டம் பற்றிய கூடுதலான தகவல்கள் Barclay, 154-64ல் தரப்பட்டுள்ளன. [36]Livy (Titus Livius; 59 B.C. - A.D. 17), "History." Quoted in Copeland, 293. [37]நீதிமொழிகள் 18:9ஐயும் காணவும் ("வீணாக்குபவன்" என்ற வார்த்தை "அழிக்கின்ற ஒருவன்" என்று அர்த்தப்படுவதாக இருப்பினும்; நீங்கள் வாழும் இடத்திற்கு தகுந்த வகையில் நடைமுறைப்

பயன்பாட்டை ஏற்படுத்தவும். "வீணுக்கும் தன்மை" என்று கண்ணோக்கப்படுகிற விஷயமானது அகச்சார்புடையதாக, ஒருவர் வாழ்கின்ற சமூகம் மற்றும் ஒருவர் வளர்க்கப்பட்ட விதம் ஆகியவற்றைச் சார்ந்ததாக உள்ளது. ஒருவருக்கு "வீணுக்கப்படுவதாக" இருப்பது இன்னொருவருக்கு அவ்வாறு இராதிருக்கலாம் (மத்தேயு 26:8ஐக் காணவும்). இருப்பினும் வேதாகமத்தை நம்புகின்ற யாவரும், வீணுக்குதல் என்பது தவறானது என்ற பொதுவான கருத்தை ஒப்புக்கொள்ள முடியும். [38]மார்ட்டின் ஃபிரான்ஸ்மென் என்பவர் இதை, "புதிய ஏற்பாட்டிலேயே அடிமைத்தனம் பற்றிப் பேசப்பட்ட மிகவும் கடுமையான வார்த்தை" என்று அழைத்தார், அவர் இவ்வசனப்பகுதியானது "செலவு மிகுந்த இந்தக் காட்சியின் கீழாக மிருகத்தன்மை இருந்ததைக் குறிக்கிறது" என்று குறிப்பிட்டார் (*The Revelation to John* [St. Louis: Concordia Publishing House, 1976], 122. [39]சில மதிப்பீடுகள், ரோமாபுரியின் மக்கள் தொகையில் பாதி வரையிலும் கூடச் செல்லுகின்றன. [40]Wiersbe, 615.

[41]"ஆத்துமாக்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது சில வேளைகளில் "உயிர்கள்" என்று அர்த்தப்படுகிறது. அடிமைச் சந்தையானது *somatemporas* என்று அழைக்கப்பட்டது, இது "ஆத்துமாக்கள் விற்கப்பட்ட இடமாக இருந்தது." [42]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 235. [43]Philip E. Hughes, *The Book of the Revelation: A Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 189. [44]நீங்கள் இந்தப் பட்டியலை முடித்து வைக்கும்படி நான் உங்களை அனுமதிப்பேன். நீங்கள் வாழ்கின்ற சமுதாயத்திற்கு இதை நடைமுறைப்படுத்தவும். அமெரிக்காவில், ஜிம் மெக்கைகன் என்பவர், மது பானத்தையும் புகையிலை மீதுள்ள ஆர்வத்தையும் கூட்டுவார், நானும்கூட அவ்வாறே கூட்டுவேன். [45]Quoted in Herbert V. Prochnow, *A Dictionary of Wit, Wisdom, & Satire* (New York: Popular Library, 1964), 242. [46]"தீர்க்கதரிசிகள்" மற்றும் "பரிசுத்தவான்கள்" என்பவர்கள் இரண்டு தனிப்பட்ட மற்றும் தனிச்சிறப்பான குழுக்களாய் இருந்ததில்லை; "தீர்க்கதரிசிகள்" என்பவர்கள் "பரிசுத்தவான்கள்" (கிறிஸ்தவர்கள்) என்ற பொதுக்குழுவினுள் இருந்த விசேஷித்த குழுவினர் ஆவர். இவ்விரு சொற்றொடர்களும் ஒன்று சேர்ந்து, வேதசாட்சியாக மரித்த எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிப்பதாக உள்ளது. [47]23ஆ மற்றும் 24 ஆகிய வசனங்களை எசேக்கியேல் 24:6, 7 ஆகிய வசனங்களுடன் ஒப்பிடவும். [48]"பூமியில் கொல்லப்பட்ட அனைவரும்" என்பது ரோமாபுரியின் இராணுவ யுத்தங்களில் கொல்லப்பட்ட அனைவரையும் (அவர்கள் கிறிஸ்தவர்களாய் இருந்தாலும் இல்லாதிருந்தாலும்) உள்ளடக்குகிறது என்று சிலர் நம்புகின்றனர். ஒரு வேளை இது பொருத்தமானதாக இருந்தாலும், இவ்விடத்தில் தேவனுடைய மக்கள் கொலைசெய்யப்பட்ட விஷயம் தான் வலியுறுத்தப்படுகிறது. [49]Mounce, 335. இயேசு, மத்தேயு 23:35ல் எருசலேமைப் பற்றி இதே வகையான கூற்றொன்றைக் கூறினார். [50]இந்தப்பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் கிறிஸ்தவர்களாகும்படி அல்லது, அவர்கள் உண்மையற்ற கிறிஸ்தவர்களாய் இருந்தால், அவர்கள் கர்த்தரிடமாய்த் திரும்பும்படி நீங்கள் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். கிறிஸ்தவராவதற்கான வசனப்பகுதிகளில் யோவான் 3:16; மாற்கு 16:16; நடபடிகள் 2:38; கலாத்தியர் 3:26, 27 ஆகியவை உள்ளடங்குகின்றன. மீளக்கட்டுவிக்கப்படுதலுக்கான வசனப்பகுதிகளில் நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16; 1 யோவான் 1:9 ஆகியவை உள்ளடங்குகின்றன.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *தானியேல் 5ல் உள்ள, சுவற்றின்மீது கையெழுத்துப் பற்றிய வரலாற்றை வாசிக்கவும். இந்த வரலாறானது வெளிப்படுத்தின விசேஷம் 18ல் மகா பாபிலோனுக்கு நடைமுறைப்படுத்தப் படக்கூடும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இது இன்றைய நாட்களின் மக்களுக்கு நடைமுறைப்படுத்தப்படக்கூடுமா?*
2. *ரோமர் 1:24-32ல் வரைக்குறிப்பிடப்பட்டுள்ளபடி, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலகட்டத்திலிருந்த பாவங்களைப் பற்றிக் கலந்துரையாடவும். இதே பாவங்கள் இன்றும் மேலோங்கி யுள்ளனவா?*
3. *நீதிமொழிகள் 14:34 இன்றளவும் உண்மையாக உள்ளது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இது நீங்கள் வாழும் நாட்டிற்குச் செய்தி எதையாவது கொண்டுள்ளதா?*
4. *நீங்கள் உட்பட, ஒவ்வொருவரும் செல்வாக்குக் கொண்டிருப்பதாக வேதாகமம் போதிக்கிறதா? உங்கள்மீது நேர்மறையாக அல்லது எதிர்மறையாகச் செல்வாக்குச் செலுத்தியவர்கள் பற்றிய உதாரணங் களைத் தரவும்.*
5. *அகந்தைக்கு எதிரான எச்சரிக்கைக்கு உதாரணங்கள் வேதாகமத்தில் நிறைந்துள்ளன. இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை தவிர பிற வேதாகம உதாரணங்களை நீங்கள் நினைத்துப்பார்க்க முடியுமா?*
6. *உக்கிராணத்துவம் பற்றிய வேதாகம ரீதியான கருத்தைப் பற்றிக் கலந்துரையாடவும். நாம் வீணாக்குபவர்களாய் இராதபடிக்கு இந்தக் கருத்து நமக்கு எவ்வாறு போதிக்கிறது என்று கூறவும்.*
7. *ஒவ்வொரு பாவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியிலும் சுயநலம்தான் உள்ளது என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது. சுயநலமின்றி இருத்தல் என்பது மிகவும் கடினமானதா?*
8. *நமது பாடத்திற்கான வசனப்பகுதி, அடிமைத்தனம் பற்றி எதிர்மறைக் கண்ணோட்டத்தைத் தருகிறது. புதிய ஏற்பாடானது, கட்டளை என்பதன் மூலமாக அல்ல ஆனால் கொள்கை ரீதியாகவே அடிமைத்தனத்தைப் பொதுவாகக் கண்டனம் செய்கிறது. விஷயம் இப்படியிருக்கக் காரணம் என்னவாக இருக்கும் என்பது பற்றி நீங்கள் யூகிப்பது என்ன? அடிமைத்தனத்திற்கு முற்றுப்புள்ளிவைக்கும்படி மக்களை ஊக்குவித்த வேதாகமக் கொள்கைகள் யாவை?*
9. *ரோமாபுரியானது தனது தராதர அளவைகளை ஏற்றுக்கொள்ளும்படி உலகத்தின்மீது செல்வாக்குச் செலுத்திற்று. உலகமானது தனது மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளும்படி இன்னமும் பலர்மீது செல்வாக்குச் செலுத்துகிறதா?*